நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் மார்ச் திங்கள் 5 ம் நாள் வியாழக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.315/2026
CNR.No.TNTS02-000909-2026
IN
குற்ற எண்.2/2026

ஜான் ஜோசப்,
த.பெ.டேனியல் ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
கடையம் கா.நி.கு.எண்.2/2026 ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.சுடலைமணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை-II அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் ...

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/எதிரிக்கு பிரிவு 480 BNS ன் கீழ் பிணை வழங்க வேண்டி 2 வது பிணை மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. மனுவின் சுருக்கம்</u> :-**

மனுதாரருக்கு எதிராக U/s. 331(4), 305(a) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், மனுதாரர் தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர் ஜாமீன்தாரர்களை முன்னிருத்த தயாராக இருக்கிறார் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்</u>** :-

எதிரி மீது கடையம் காவல்நிலைய குற்ற எண்கள். 1)4/2026, U/s 331(3), 331(4), 305(a) BNS, 2)2/2026, U/s 331(4), 305(a) BNS, 3)5/2026, U/s 331(4), 305(a) BNS, வீ.கே.புதூர் காவல் நிலைய குற்ற எண்.4)3/2026, U/s 331(4), 305(d) BNS, ஊத்துமலை காவல் நிலைய குற்ற எண்கள்.5)24/2026, U/s 331(4), 305(d) BNS, 6)

25/2026, U/s 331(4), 305(d) BNS ஆகிய முன்வழக்குகள் உள்ளதாகவும், எதிரியை பிணையில் வெளியில் விட்டால் தொடர்ந்து இது போன்ற திருட்டு சம்பவத்தில் ஈடுபடுவார் என்பதாலும், சாட்சிகளை மிரட்டி கலைத்துவிடுவார் என்பதாலும், வழக்கு விசாரணைக்கு சரியான முறையில் ஆஜராகாமல் வெளிமாநிலம் சென்று தலைமறைவாகக்கூடும் என்பதாலும், வழக்கின் மற்றொரு எதிரியான சுடலைமுத்து என்பவர் இன்னும் கைது செய்யப்படாமல் இருந்து வருவதாலும், வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாகவும், எனவே எதிரிக்கு பிணை கொடுக்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>தீர்வு</u>** :-

4. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர்/எதிரி கடந்த 17.02.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பது தெரியவருகிறது. முதல் தகவல் அறிக்கையில், 03.01.2026 ம் தேதி காலை 6.00 மணிக்கு வழக்கம் போல பூஜை செய்வதற்காக கோவிலுக்கு தான் சென்ற போது கோவிலின் சாமி சிலை முன்புள்ள கிரில் கேட்டில் உள்ள பூட்டுகள் இரண்டும் இல்லாமல் சாத்திய நிலையில் இருந்தது என்றும், சந்தேகத்தில் கோவில் உள்பிரகாரம் சென்று பார்த்தபோது சாமி சிலையில் இருந்த சுமார் 14 கிராம் எடையுள்ள தங்க பொருட்கள் களவாடப்பட்டிருந்தது தெரிய வந்தது என்றும் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், மேலும், அரசு தரப்பில், எதிரி மீது கடையம் காவல்நிலைய குற்ற எண்கள். 1)4/2026, U/s 331(3), 331(4), 305(a) BNS, 2)2/2026, U/s 331(4), 305(a) BNS, 3)5/2026, U/s 331(4), 305(a) BNS, வீ.கே.புதூர் காவல் நிலைய குற்ற எண்.4)3/2026, U/s 331(4), 305(d) BNS, ஊத்துமலை காவல் நிலைய குற்ற எண்கள்.5)24/2026, U/s 331(4), 305(d) BNS, 6) 25/2026, U/s 331(4), 305(d) BNS ஆகிய முன்வழக்குகள் உள்ளதாகவும், எதிரியை பிணையில் வெளியில் விட்டால் தொடர்ந்து இது போன்ற திருட்டு சம்பவத்தில் ஈடுபடுவார் என்பதாலும், சாட்சிகளை மிரட்டி கலைத்துவிடுவார் என்பதாலும், வழக்கு விசாரணைக்கு சரியான முறையில் ஆஜராகமாலும் வெளிமாநிலம் சென்று தலைமறைவாகக்கூடும் என்பதாலும், வழக்கின் மற்றொரு எதிரியான சுடலைமுத்து என்பவர் இன்னும் கைது செய்யப்படாமல் இருந்து வருவதாலும், வழக்கானது புலன்

விசாரணையில் இருந்து வருவதாகவும், எனவே எதிரிக்கு பிணை கொடுக்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், எதிரியை தற்போதுள்ள சூழ்நிலையில் பிணையில் விடுவித்தால் இதுபோன்ற குற்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட வாய்ப்புள்ளது என்பதாலும், மேலும் மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்கினால் அது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு மேற்சொன்னவாறு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் மார்ச் திங்கள் 5 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 16:02:19 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.